# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - கேசவன்தமர்
## எம்பெருமானது திருவருளால் தமது ஏழேழ் தலைமுறையோரும் பெருமை பெற்றார் எனல் - பன்னிருநாமப் பாட்டு

** கேசவன் தமர் * கீழ் மேல் எமர் ஏழ் எழு பிறப்பும் *
மா சதிர் இது பெற்று * நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா! **
ஈசன் என் கருமாணிக்கம் * என் செங்கோலக் கண்ணன் விண்ணோர்
நாயகன் * எம்பிரான் எம்மான் * நாராயணனாலே 1

நாரணன் முழு ஏழ் உலகுக்கும் நாதன் * வேத மயன் *
காரணம் கிரிசை கருமம் இவை * முதல்வன் எந்தை **
சீர் அணங்கு அமரர் பிறர் பலரும் * தொழுதேத்த நின்று *
வாரணத்தை மருப்பொசித்த பிரான் * என் மாதவனே 2

மாதவன் என்றதே கொண்டு * என்னை இனி இப்பால் பட்டது *
யாதவங்களும் சேர் கொடேன் என்று * என்னுள் புகுந்து இருந்து **
தீதவம் கெடுக்கும் அமுதம் * செந்தாமரைக் கண் குன்றம் *
கோதவம் இல் என் கன்னற்கட்டி * எம்மான் என் கோவிந்தனே 3

கோவிந்தன் குடக்கூத்தன் * கோவலன் என்றென்றே குனித்து *
தேவும் தன்னையும் * பாடி ஆடத் திருத்தி ** என்னைக் கொண்டு என்
பாவம் தன்னையும் பாறக் கைத்து * எமர் ஏழ் எழு பிறப்பும் *
மேவும் தன் மையம் ஆக்கினான் * வல்லன் எம்பிரான் விட்டுவே 4

விட்டிலங்கு செஞ்சோதித் * தாமரை பாதம் கைகள் கண்கள் *
விட்டிலங்கு கருஞ்சுடர் * மலையே திரு உடம்பு **
விட்டிலங்கு மதியம் சீர் * சங்கு சக்கரம் பரிதி *
விட்டு இலங்கு முடி அம்மான் * மதுசூதனன் தனக்கே 5

மதுசூதனை அன்றி மற்றிலேன் என்று * எத்தாலும் கருமம் இன்றி *
துதி சூழ்ந்த பாடல்கள் * பாடி ஆட நின்று ஊழி ஊழி தொறும் **
எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் * எனக்கே அருள்கள் செய்ய *
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் * திரிவிக்கிரமனையே 6

திரிவிக்கிரமன் செந்தாமரைக் கண் * எம்மான் என் செங்கனி வாய் *
உருவில் பொலிந்த * வெள்ளைப் பளிங்கு நிறத்தனன் ** என்றென்று உள்ளிப்
பரவிப் பணிந்து * பல் ஊழி ஊழி நின் பாத பங்கயமே *
மருவித் தொழும் மனமே தந்தாய் * வல்லை காண் என் வாமனனே 7

வாமனன் என் மரதக வண்ணன்! * தாமரைக் கண்ணினன்!
காமனைப் பயந்தாய்! * என்றென்று உன் கழல் * பாடியே பணிந்து **
தூ மனத்தனனாய்ப் * பிறவித் துழதி நீங்க * என்னைத்
தீ மனம் கெடுத்தாய் * உனக்கு என் செய்கேன்? என் சிரீதரனே! 8

சிரீஇதரன் செய்ய தாமரைக் கண்ணன் * என்றென்று இராப் பகல் வாய்
வெரீஇ * அலமந்து கண்கள் நீர் மல்கி * வெவ்வுயிர்த்து உயிர்த்து **
மரீஇய தீ வினை மாள இன்பம் வளர * வைகல் வைகல்
இரீஇ * உன்னை என்னுள் வைத்தனை * என் இருடீகேசனே! 9

இருடீகேசன் எம்பிரான் * இலங்கை அரக்கர் குலம் *
முருடு தீர்த்த பிரான் * எம்மான் அமரர் பெம்மான் என்றென்று **
தெருடி ஆகில் நெஞ்சே! வணங்கு * திண்ணம் அறி அறிந்து *
மருடி ஏலும் விடேல் கண்டாய் * நம்பி பற்பநாபனையே 10

பற்பநாபன் உயர்வு அற உயரும் * பெருந்திறலோன் *
எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு * எனக்கே தன்னைத் தந்த
கற்பகம் ** என் அமுதம் கார் முகில் போலும் * வேங்கட நல்
வெற்பன் * விசும்போர் பிரான் * எந்தை தாமோதரனே 11

தாமோதரனைத் தனி முதல்வனை * ஞாலம் உண்டவனை *
ஆமோ தரம் அறிய * ஒருவர்க்கு என்றெ தொழும் அவர்கள் **
தாமோதரன் உரு ஆகிய * சிவற்கும் திசைமுகற்கும் *
ஆமோ தரம் அறிய? * எம்மானை என் ஆழி வண்ணனையே 12

** வண்ண மா மணிச் சோதியை * அமரர் தலை மகனை *
கண்ணனை நெடுமாலைத் * தென்குருகூர்ச் சடகோபன் **
பண்ணிய தமிழ் மாலை * ஆயிரத்துள் இவை பன்னிரண்டும் *
பண்ணில் பன்னிரு நாமப் பாட்டு * அண்ணல் தாள் அணைவிக்குமே 13

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---